**செய்தி வெளியீடு எண்:498** **நாள்:25.10.2016**

<u>பொது (தேர்தல் 4)த் துறை</u>

## <u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தற்போது வேட்புமனு சமர்ப்பிப்பதற்கான படிவம் 2A (பாராளுமன்றத் தேர்தலுக்குரியது) மற்றும் படிவம் 2B (சட்டப்பேரவைத் தேர்தலுக்குரியது) ஆகியவற்றில் வேட்பாளரின் புகைப்படத்தை ஒட்டுவதற்கும், தனது குடியுரிமை குறித்த உறுதிமொழியான அதாவது தான் ஒரு இந்தியக் குடிமகன் எனவும் வேறு எந்த நாட்டின் குடியுரிமையையும் பெறவில்லை எனவும் உறுதிமொழியை அளிப்பதற்கான திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

மேற்படி திருத்தம் செய்யப்பட்ட படிவங்கள் அச்சிடப்பட்டு உரிய தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருத்தம் செய்யப்பட்ட புதிய படிவத்தில் வேட்பாளர்களின் வேட்புமனுவைப் பெற வேண்டும் எனத் தற்போது தேர்தல் நடக்கவுள்ள சட்டமன்றத் தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ்நாடு

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**